# ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, ஈரோடு மாவட்டம்
## இரண்டாம் பருவம் (2019–20)
## சமூகஅறிவியல் – வினாத்தாள் –1

**வகுப்பு : 5** **மொத்த மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு** **5 x 1 =5**

1. எகிப்தில் உள்ள சிறிய பிரமிடுகள் ............... காக உருவாக்கப்பட்டன
   அ) இளவரசர் ஆ) அரசர் இ) அரசி

2. சிந்துவெளி நாகரிகம் ..................... நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது.
   அ) எகிப்து ஆ) ஹரப்பா இ) அமெரிக்கா

3. ஆதிச்சநல்லூர் .............இல் உள்ளது.
   அ) தூத்துக்குடி ஆ) சென்னை இ) புதுச்சேரி

4. கீழடி ................ காலம் என்பதனைத் தெரிவிக்கிறது.
   அ) நவீன ஆ) சங்க இ) இடைக்

5. அகழ்வாராய்ச்சியின் மூலம் மனிதர்கள் மற்றும் அவர்கள் வாழ்ந்த இடங்கள் பற்றிய வரலாற்றினைப் படிப்பவர்கள்..................
   அ) தொல்பொருள் ஆய்வாளர் ஆ) அறிவியலாளர் இ) அகழ்வாராய்ச்சியாளர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக** **4 x 1 =4**

1. ____________________ தாலுகாவில் கீழடி கிராமம் உள்ளது.

2. அரியலூரில் உள்ள ________________ல் டைனோசர் முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

3. அரிக்கமேடு ______________ நகரத்துடன் வாணிபத் தொடர்பு கொண்டிருப்பதை அகழ்வாராய்ச்சி மூலம் அறிய முடிகிறது.

4. எகிப்தில் உள்ள ______________ உலக அளவில் ஆர்வத்தை ஏற்படுத்திய அகழ்வாராய்ச்சி

**III. சரியா தவறா ?** **5 x 1=5**

1. அகழ்வாராய்ச்சியின் போது தொல்வினைப் பொருள்கள் கண்டறியப்பட்டன.
2. சிந்துவெளி நாகரிகம் ஹரப்பாவில் உள்ளது.
3. ஆதிச்சநல்லூர் என்ற தொல்பொருள் ஆய்வு இடம் தமிழ்நாட்டில் கோயம்புத்தூரில் உள்ளது.
4. கீழடியில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சி கீழடி ஒரு வளர்ச்சியடைந்த நகரம் என்பதைத் தெரிவிக்கிறது.
5. ரோமன் விளக்குகள் கண்ணாடிப் பொருள்கள் விலை உயர்ந்த கற்கள் போன்றவை அரிக்கமேடு என்ற இடத்தில் கண்டறியப்பட்டன.

www.kalviexpress.in www.kalviexpress.in

**IV. பொருத்துக** **5 x 1 =5**

| | | |
|---|---|---|
| 1. நிலத்தடி நீர் | – | தமிழகம் முன்னிலை வகிக்கிறது. |
| 2. 1000 மி.லி | – | கீழடி |
| 3. மட்பாண்டம் | – | ரோமன் விளக்கு |
| 4. சிவகங்கை | – | சிந்து நாகரிகம் |
| 5. அரிக்கமேடு | – | எகிப்து |

**V. விடையளி** **3 x 2= 6**

1. அகழ்வாராய்ச்சி என்றால் என்ன ?
2. தொல்பொருள் ஆய்வாளர் என்பவர் யார் ?
3. பிரமிடுகள் பற்றிய சிறுகுறிப்பு வரைக.

www.kalviexpress.in www.kalviexpress.in

# ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, ஈரோடு மாவட்டம்
## இரண்டாம் பருவம் (2019–20)
## சமூகஅறிவியல் – வினாத்தாள் –2

**வகுப்பு : 5** **மொத்த மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு** **5 x 1 =5**

1. இரண்டு பெரிய நீர்ப்பரப்புகளை இணைக்கும் குறுகிய நீர்ப்பரப்பு .............. ஆகும்.

   அ) உப்பங்கழி ஆ) நீர்ச்சந்தி இ) விரிகுடா

2. பொருந்தாததை வட்டமிடு.

   அ) கங்கை ஆ) அட்லாண்டிக் இ) ஆர்டிக்

3. ஆவியாதல் என்பது நீர்சுழற்சியின் ................. படிநிலை

   அ) முதல் ஆ) இரண்டாம் இ) நான்காம்

4. நீர்க்கோளம் என்பது பூமியின் மேற்பரப்பில் உள்ள மொத்த ................ அளவு ஆகும்.

   அ) காற்று ஆ) நீர் இ) நிலம்

5. அனைத்துப் பக்கங்களிலும் நிலத்தால் சூழப்பட்ட நீர்ப்பரப்பு .................. ஆகும்.

   அ) தீவு ஆ) வளைகுடா இ) ஏரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக** **4 x 1 =4**

1. இந்திய நதிகளுள் ஒன்று ______________________ .

2. இராஜஸ்தானில் உள்ள ________________ ஏரி மிகப்பெரிய உப்புநீர் ஏரி ஆகும்.

3. நதிநீர் உயர்த்திலிருந்து கீழே விழும்போது ________________எனப்படும்.

4. நீர்பரப்பினை ஒருபுறம் நிலமும் மறுபுறங்கள் கடலை நோக்கி இருந்தால்____________ எனப்படும்.

**III. சரியா தவறா ?** **5 x 1=5**

1. பூமியில் 97% நீர் உப்பாக உள்ளது.
2. நமது அன்றாடத் தேவைகளுக்கு நீர் தேவை .
3. கடல்நீர் உப்பாக இருக்கும்.
4. பாத்திரங்களை கழுவிமுடிக்கும் வரை குழாயைத் திறந்து வைக்க வேண்டும்.
5. நாம் தண்ணீரை சேமிக்க வேண்டும்.

**IV. பொருத்துக** **5 x 1 =5**

| | | | |
|---|---|---|---|
| 1. | நன்னீர் | – | உயிரினங்கள் வாழ்வதில்லை |
| 2. | உப்பங்கழி | – | பாக்நீர்சந்தி |
| 3. | இந்தியப் பெருங்கடலும் வங்காள விரிகுடாவும் இணைக்கும் | – | மேகங்கள் உருவாதல் |
| 4. | சாக்கடல் | – | ஒடிசாவில் உள்ள சிலிகா |
| 5. | ஆவிசுருங்குதல் | – | தால் ஏரி |

**V. விடையளி** **3 x 2= 6**

1. நீர்க்கோளம் வரையறு.
2. நீர்க்கோளம்  முக்கியம், ஏன் ?
3. பல்வேறு வகையான நீர்ப்பரப்புகளின் பெயர்கள் எழுதுக.